செ.வெ.எண் : 917 நாள் : 06.12.2017

# கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள 4 நகராட்சிகளிலும், 8 பேரூராட்சிகளிலும் 100 சதவித மின் விநியோகம் வழங்கப்பட்டுள்ளது.

## மாவட்ட கண்காணிப்பு அலுவலரும் தகவல் தொழில்நுட்பத்துறை அரசு செயலாளருமான திரு.டி.கே.இராமச்சந்திரன்,இ.ஆ.ப., அவர்கள் தகவல்

கன்னியாகுமரி மாவட்டத்தில் ஒகி புயலின் எதிரொலியாக 29.11.2017 நள்ளிரவு கடுமையான சூறைக்காற்றுடன் கூடிய கனமழை பெய்ததன் காரணமாக கன்னியாகுமரி மாவட்டத்தில் இதுவரை கண்டிராத கடும் சேதங்கள் ஏற்பட்டது. அதனைத் தொடர்ந்து, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் உத்தரவுப்படி 8 அரசு செயலாளர்கள், இயக்குநர்கள் நிலையில் அலுவலர்கள் கன்னியாகுமரியில் முகாமிட்டு, அவர்களது தீவிர கண்காணிப்பில் மாவட்டத்தில் மறுசீரமைப்பு மற்றும் புணரமைப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

அதன்படி, கன்னியாகுமரி மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்டு வரும் சீரமைப்பு பணிகள் குறித்து மாவட்ட கண்காணிப்பு அலுவலரும் தகவல் தொழில்நுட்பத்துறை அரசு செயலாளருமான திரு.டி.கே.இராமச்சந்திரன்,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்ததாவது:

30.11.2017 அன்று வரபெற்ற புகார்களின் அடிப்படையில் கடலுக்கு மீன்பிடிக்க சென்று கரை திரும்பாத 294 மீனவர்கள், 39 படகுகளில், இதுவரை 229 மீனவர்கள் மற்றும் 19 படகுகள் மீட்கப்பட்டு கரையில் பாதுகாப்பாக உள்ளனர். மீதமுள்ள 65 மீனவர்கள் மற்றும் 20 படகுகளை கடலோர காவற்படை மற்றும் மீன்வளத்துறை மூலமாக கண்டறிந்து மீட்பதற்கான நடவடிக்கைகள் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வருகிறது. அதேவேளையில் இன்றைய கணக்கீட்டின்படி ஆழ்கடல் மீன்பிடிப்பிற்காக 29.11.2017-க்கு முன்பாக கடலுக்கு மீன்பிடிப்பதற்காக கடலுக்குள் சென்ற 2,384 மீனவர்கள் தமிழகத்தின் அருகாமை கடலோர பகுதிகளான 4 மாநிலங்களில் பாதுகாப்பாக இருப்பது உறுதி செய்யப்பட்டடுள்ளது.

மேலும், மின்சார விநியோகத்தினை பொறுத்த வரையில், தமிழ்நாடு மின்சார வாரியத்தின் மூலம் மாவட்டத்தில் 10,500 மின்கம்பங்கள் பழுதடைந்ததில் இதுவரை 80 சதவித மின்கம்பங்கள் மாற்றப்பட்டுள்ளது. 4 நகராட்சிகளிலும், 8 பேரூராட்சிகளிலும் முழு சீரமைப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டு 100 சதவித மின் விநியோகம் வழங்கப்பட்டு உள்ளன. 15 பேரூராட்சிகளில் பகுதியளவில் சீரமைக்கப்பட்டும், கிராம ஊராட்சி பகுதிகளில் 50 சதவிதம் சீரமைக்கப்பட்டும் மின் விநியோகம் வழங்கப்பட்டு வருகிறது. இன்னும் 3 தினங்களுக்குள் மாவட்டம் முழுவதும் மின் விநியோகம் சீரமைக்கப்படும்.

மின்சார விநியோகம் பாதிக்கபட்டிருந்த சூழ்நிலையிலும் ஜெனரேட்டர் உதவியுடன் பொதுமக்கள் பாதிக்காத வகையில் 100 சதவித குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு, தொடர்ந்து சீரான குடிநீர் வழங்கப்பட்டு வருகின்றது என கன்னியாகுமரி மாவட்ட கண்காணிப்பு அலுவலரும் தகவல் தொழில்நுட்பத்துறை அரசு செயலாளருமான திரு.டி.கே.இராமச்சந்திரன்,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்தார்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், கன்னியாகுமரி.**